மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தங்கள் கொடுப்பவர்கள் இன்றைக்குள் கொடுத்துவிடுங்கள். இன்றைக்குள் கொடுத்து விட்டால் அந்தத் திருத்தங்களை பின்பு முன்மொழிந்து கொள்ள லாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை இப்பொழுது முன்மொழிந்திருக்கிறார்கள்.

He has now moved the Resolution. Before he is allowed to speak on it, certain amendments which have been given notice of may be moved. Then, both the Resolution and the amendments will be before the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் திருத்தங்கள் என் கைக்கு வரவில்லை. அந்தத் திருத்தங்களைப் பார்த்துவிட்டு அனு மதி தந்த பிறகுதான் சர்குலேட் செய்ய வேண்டும். கொடுப் பவர்கள் இன்றைக்குக் கொடுத்துவிட்டால் நாளைக்கு முன் மொழிந்து கொள்ளலாம். பேசுவதை வேண்டாமென்று சொல்ல வில்லை.

7. நடைமுறைக் கேள்விகள்.

(அ) முதலமைச்சர் முன்மொழிந்துள்ள தனித்தீர்மானத்திற்கு உறுப்பினர்கள் உடனடியாகத் திருத்தங்கள் முன்மொழிவது குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நம்முடைய சட்டமன்ற மரபுகூட, மானியக் கோரிக்கைகள் வரும்போது கூட அமைச்சர்கள் மானியக் கோரிக்கைகளை அவை முன் வைத்தவுடன் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பி னர்கள் அவற்றை முன்மொழிகிறார்கள். அதற்குப் பிறகு அமைச் சர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் வேறு. ஆளுநர் அவர்கள் உரைக்கு மறுநாள் திருத்தங்கள் கொடுக்கிறோம். அதே போன்று இதற்கும் திருத்தங் களை நாளைக்கு முன்மொழியலாம்.

THIRU K. T. K. TANGAMANI: Sir, we want your guidance, If the Hon. Chief Minister had moved a Resolution that the Report of the Rajamannar Committee be taken into consideration, that would have been an innocuous Resolution. Now, we find that the Resolution contains recommendations to the Centre. Also it was given to us only last night and so we have no time to move amendments. As the resolution requests the Government of India to take certain steps, Members would like to move part-amendments or substitute amendments. Only some Members have given notice of amendments. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கும் திருத்தங்களை எல்லாம் இன்னும் சரியாகப் பார்க்கவில்லை. ரோனியோ ஆகவில்லை. முறையாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு சர்குலேட் பண்ண வேண்டும்.

THIRU K. T. K. TANGAMANI: Sir, in the Rules it is only stated—

'The Speaker may refuse to put an amendment which is, in his opinion, frivolous.

So, am I to take it that you are directing that these amendments will be taken up tomorrow?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடியோடு இது வேண்டாம் என்று சொல்லப்படுகிற அளவுக்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதைப் பார்த்த பிறகு திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருத்தங்கள் கொடுக்கிறவர்கள் நாளைக் காலை வரை கொடுக்கலாம். அதுவரை திருத்தங்களை ஏற்றுக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. அவர்கள் கூறுவது போல் இப்போதும் கொடுக்கலாம்.

DR. H. V. HANDE: Sir, on a point of order. It is not like the ordinary Resolutions. Suddenly we have been supplied with a copy of the printed speech of the Hon. Chief Minister. It is

like the Governor's Address. Normally one day is allowed for moving amendments to the Governor's Address. Then the Motion of Thanks is also circulated. . .

நேற்றுதான் ரெசல்யூஷன் வந்திருக்கிறது. வந்தவுடனே காலையில் திருத்தங்கள் கொடுத்தாகிவிட்டது.

We have already given them.

சைக்ளோஸ்டைல் பண்ணுவதற்கு முன்பு சரியாக இருக்கிறதா என்று தாங்கள் இப்போதே பார்த்து விட்டால் நாங்கள் மூவ் பண்ணுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு அதிலே ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, other Members also would like to give notice of amendments.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்காதவர்கள் நாளைக் காலையிலும் கொடுக்கலாம்.

6. அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

மாநில சுயாட்சி பற்றியும் இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ் நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப் படவேண்டும் என்பது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைப் பெறப்போகும் சிறப்புமிக்க தீர்மானத்தை நமது தமிழ்நாடு சட்டப் பேரவையில் முன்மொழிகிற பேறு பெற்றமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சிந்தனைச் செல்வம் மிகுதியாகப் பெற்றுள்ள இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தத் தீர்மானத்தின் நல்ல நோக்கத்தை ஆய்ந்து தெளிந்து தங்கள் பேராதரவை நல்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவின் வலிவும் பொலிவும் கெடாமலிருக்கவும், ஒருமைப்பாட்டுக்கு ஒரு துளி தீங்கும் நேராமல் இருக்கவும் தன் பங்கு எப்போதும் உண்டு என்று சூளுரை மேற்கொண்டு